முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 23.03.2026

O.S No. 168/2021

பி.வா.சா.1- ஜேக்கப் எட்வின்

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் நடத்தி வரும் தொழில் கூடமானது ஐசக் உட் ஒர்க்ஸ் என்றால் சரி. அதில் மரவேலைகள் செய்வேன் என்றால் சரி. ஐசக் உட் ஒர்க்ஸ் நடத்தி வருவதை காட்ட பி.வா.சா.ஆ.1 தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மரக்கடை என்பது மரங்களை விற்ககூடிய இடம் என்றால் சரி. பி.வா.சா.ஆ.4 ரசீதுகளில் மரக்கடை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரி. பி.வா.சா.ஆ.4 ரசீதுகளில் எந்த இடத்திலும் ஐசக் உட் ஒர்க்ஸ் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. பி.வா.சா.ஆ.5 ஆவணத்திலும் ஐசக் உட் ஒர்க்ஸ் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. பி.வா.சா.ஆ.3 கட்டிட அனுமதி வரைபடத்தில் கட்டிடம் என்று மட்டுமே உள்ளது மரக்கடை என்றோ ஐசக் உட் ஒர்க்ஸ் என்ற விவரமோ இல்லை என்றால் சரி.

அந்த கடையின் மின் இணைப்பு 3 Phase line என்றால் சரி. 2 மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணம் 1500 ரூபாய் வரும். 1500 ரூபாய் மின்கட்டணம் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் தமிழக அரசிடம் தொழில் செய்ய அனுமதி பெற்றதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மரக்கடையில் இருந்து சிறிய துகள்கள் வரும் என்றால் வரும். அந்த மரத்துகள்களை சுவாசித்தால் மூச்சுதிணறல், ஆஸ்துமா போன்ற பிரச்சனைகள் வரும் என்றால் சரியல்ல. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மரக்கடையை நடத்த வேண்டும் என்றால் சரிதான். நான் இடையூறு இல்லாமல் நடத்தி வருகிறேன். என்னுடைய தொழிலால் இடையூறு ஏற்படவில்லை என்பதற்கு மாசுகட்டுபாட்டு வாரியத்தில் இருந்து சான்றிதழ்

வாங்கவில்லை என்றால் சரி, அவர்கள் தேவை இல்லை என்று சொன்னதால் வாங்கவில்லை. மாசுகட்டுபாட்டு வாரியத்தை நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரி. வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. நான் முதன்மை சாட்சியத்தில் சொல்லிய விவரங்கள் பொய் என்றால் சரியல்ல.